29.06.2026 IA.7/2022 in OS.No.88/2019

சாட்சி : PW.3 வெங்கடேஷசபெருமாள்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**2, 4, 5 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1.என் பெயர் வெங்கடேஷசபெருமாள் என்பதற்கு என்ன ஆதரவு வைத்துள்ளேன் என்றால் ஆதார் அட்டை வைத்துள்ளேன். நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஜமின் ஊத்துக்குடி கிராமத்திற்கும் நான் வசித்து வரும் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 2.5 கி.மீ தூரம் இடைவெளி உள்ளது. நான் நாளது தேதிவரை மேற்சொல்லும் முகவரியில் சர்வீஸ் சென்டர் நடத்தி வருகிறேன். உத்தேச வாதி பாபுவை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 8 வருடங்களாக தெரியும். பாபு உடன் கூடப்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் எனக்கு தெரியாது. பாபுவின் அப்பா பெயர் என்ன என்றால் வெள்ளைச்சாமி. பாபு தான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்துள்ளார் என்றால் சரிதான். பாபுவின் அம்மா பெயர் என்ன என்றால் தெரியாது. நான் பாபுவின் நண்பர் என்றால் நண்பர் இல்லை, உடன் பிறந்தவரும் இல்லை, உறவினரும் இல்லை.

2. நான் எதற்காக தன் ஆர்வத்தோடு சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் நானாக வரவில்லை பாபு அழைத்தன் பேரில் வந்துள்ளேன். பாபு என்னிடம் சொல்லிய விவரங்களை நான் நீதிமன்றத்தில் சொல்ல வந்துள்ளேனா என்றால் இல்லை. பாபுவும் இறந்து போன நாராயணனும் உடன்பிறந்தவர்களா என்றால் உடன் பிறந்தவர்கள் தான். நான் தற்போது சொன்ன நாராயணனும் பாபு அப்பாவான வெள்ளைச்சாமியும் உடன்பிறந்தவர்கள் என்பது சரிதானா என்றால் ஆமாம். இறந்து போன நாராயணன் மனைவி இறந்தது எங்கே என்றால் எனக்கு தெரியாது. நாராயணன் தான் எனக்கு பழக்கம் என்றால் சரிதான். நாராயணன் எனக்கு சொத்து உள்ளது என்று சொன்ன விவரம் தெரியுமா என்றால் தெரியும். நாராயணன் குடும்பம் பற்றி எனக்கு தெரியுமா என்றால்

தெரியும். அவரும் அவர் மனைவி உள்ள விவரம் எனக்கு தெரியும். நாராயணன் மனைவி எப்போது இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இறப்புச் சான்றிதழ், வாரிசு சான்றிதழ் பொள்ளாச்சியில் வாங்குவதற்கு நான் உதவி ஏதும் செய்தேனா என்றால் இல்லை. அது பற்றி விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் மேற்சொன்ன சான்றிதழ்கள் வாங்க உதவிசெய்தேன் என்றால் சரியல்ல. நாராயணன் உயில் ஏற்பாடு செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

3.அந்த உயில் பற்றிய விவரம் தெரியுமா என்றால் என்னிடம் சொல்லவில்லை, யார் சொல்லவில்லை என்றால் பாபுவும், நாராயணனும் சொல்லவில்லை. நாராயணனுக்கு படிக்கத் தெரியாது அவர் கைரேகை மட்டும் தான் வைப்பார் என்றால் எனக்கு அது பற்றிய விவரம் தெரியாது. நாராயணன் ஆங்கிலத்திலும், தமிழிலும் கையெழுத்து செய்வார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ராமநாதனை தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பாபுவும் ராமநாதனும் வழக்குச்சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்க்காக பொய்யான உயில் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும், அதற்கு ஆதரவாக என்னை பொய் சாட்சியம் அளிக்க அழைத்து வந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நாராயணன் நிரந்தர முகவரி என்ன என்றால் பூர்வீகம் காரைக்குடி ஆகும். நாராயணன் பொள்ளாச்சி வந்தா எவ்வளவு நாள் தங்கியிருப்பார் என்றால் பாபு வீட்டில் 1 மாதம் தங்குவார். அப்போது நாராயணன் எனது கடைக்கு வந்து என்னுடன் பேசுவார் என்றால் இல்லை என் கடைக்கு வருவதில்லை.

4. என்னிடம் காண்பிக்கப்படும் நிரூபணவாக்குமூலத்தில் நாராயணன் என் கடைக்கு வருவதையும் என்னுடன் உரையாடுவதையும் வாடிக்கையாக வைத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நாராயணன் என் கடைக்கு வந்து நலம் விசாரித்து உரையாடுவார் என்று நான் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளது உண்மையா அல்லது பக்கத்து கடைக்கு வருவார் என சொல்லியுள்ளது உண்மையா என்றால் என் கடையில் இட வசதி இல்லை என்ற காரணத்தினால் அருகில் உள்ள பேக்கரி கடையில் அவர் உட்காருவது வழக்கம் நான் அந்த கடையில் என் கடையில் வேலை இல்லாத போது வேலை செய்வது வழக்கம் அப்போது நாராயணன் உடன் பேசுவேன். தெரிந்தே நீதிமன்றத்தில் பொய் சொன்னால் BNS சட்டம் பிரிவு 229 படி 7 வருடம் தண்டனை என்ற

விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தற்போது தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எனக்கு நாராயணனை தெரியாது என்றும் பாபு என்னை பொய் சாட்சியம் சொல்ல அழைத்து வந்ததன் பேரில் நான் பொள்ளாச்சியை சேர்ந்தவன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு நாராயணனை எத்தனை வருடம் தெரியும் என்றால் 4 வருடமாக தெரியும்.

**(பிற எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.